பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:49 | 11.01.2024 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# யாழ்ப்பாணத்தில் பிரிட்டன் இளவரசி

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய இளவரசி ஆன், அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் உள்ளிட்ட குழுவினர் இன்று வியாழக்கிழமை (11) யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விசேட உலங்கு வானூர்தி மூலம் அவர்கள் நாவாந்துறை பொது மைதானத்தில் தரையிறங்கிய போது, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் உள்ளிட்டவர்கள் இளவரசியையும் குழுவினரையும் வரவேற்றனர்.

இதன்போது பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.



# நான் சீனாவின் நண்பர் அல்ல

## டேவிட் கமரூன்



சர்ச்சைக்குரிய சீனாவின் கொழும்புத்துறைமுக நகர திட்டத்திற்கு நான் இலங்கையின் நண்பனாகவே விஜயம் மேற்கொண்டேன்

நான் சீனாவின் நண்பர் அல்ல, நான் இலங்கையின் நண்பன் என பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் வெளிவிவகார குழுவின் முன்னிலையில் கருத்து தெரிவித்துள்ள டேவிட் கமரூன், தான் சீனாவின் நண்பர் என்பதை நிராகரித்துள்ளதுடன் இலங்கையின் நண்பனாகவே நான் கொழும்புத்துறைமுக நகரத்திற்கு விஜயம் மேற்கொண்டேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நான் சுற்றுலாவிற்கு சென்றவேளை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வந்திருந்தார், நான் அவரை சந்தித்த பின்னர் கொழும்புத்துறைமுக நகரத்தைச் சென்று பார்வையிட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2023 ஜனவரி மாதம் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரூன் கொழும்பின் துறைமுக நகரத்திற்கு விஜயம் மேற்கொண்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகக்கிண்ண இலங்கை அணியில் ஷாருஜன் சண்முகநாதன்



தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 19 வயதுக்குட்பட்டோருக்கான ஐ.சி.சி உலகக்கிண்ண கிரிக்கெட் தொடராருக்கான இலங்கை அணியில் ஷாருஜன் சண்முகநாதன் இடம்பிடித்துள்ளார்.

சினெத் ஜெயவர்தன தலைமையிலான இலங்கை அணியில் புலிண்டு பெரேரா, ஹிருன் கபுருபண்டார, ரவிஜான் நெத்சர, ருசன்ட கமகே, ஷாருஜன் சண்முகநாதன், டினுர கலுபஹன, மல்சா திருப்பதி, விஷ்வா லஹிரு, கருக சக்கெத், டுவின்டு ரத்நாயக்க, ருவிஷான் பெரேரா, சுபுன் வடுகே, விஹாஸ் தெவ்மிக, விஷேன் ஹலம்பகே ஆகிய வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

# ஹஜ் யாத்திரைக்கான விண்ணப்பங்கள் கோரல்

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை ஹஜ் குழுவின் ஒருங்கிணைப்புடன், 2024 ஆம் ஆண்டு ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள விரும்பும் யாத்திரிகர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோர உள்ளது.

இந்த ஆண்டு ஹஜ் யாத்திரையை மேற்கொள்வதற்காக சவூதி அரேபிய அரசாங்கம் இலங்கைக்கு 3500 கோட்டாவை வழங்கியுள்ளதுடன், ஏப்ரல் மாதத்திற்குள் கோட்டாவை பூர்த்தி செய்யுமாறு இலங்கை ஹஜ் குழுவிற்கு சவூதி அரேபிய அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

இத்திணைக்களத்தில் ஏற்கெனவே ஹஜ் செய்ய சுமார் 3000 பேர் பதிவு செய்துள்ளனர், மேலும் 500 பேர் மட்டுமே பதிவு செய்ய வாய்ப்புள்ளதாக அரசு தெரிவிக்கிறது.

# செயலாளர் பதவியை நிரந்தரமாக்க மைத்திரி முயற்சி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு நிரந்தர செயலாளர் நாயகத்தை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, முன்னாள் செயலாளர்களான மஹிந்த அமரவீர மற்றும் திலங்க சுமதிபால ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், கூடிய விரைவில் செயலாளரை நியமிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

மைத்திரியின் பொதுச் செயலாளராக செயற்பட்ட மஹிந்த அமரவீரவை அப்பதவியில் இருந்து நீக்கி திலங்க சுமதிபால அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மஹிந்த அமரவீர, நீதிமன்றத்திற்குச் சென்றபோது அங்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, இருவரும் செயலாளர்களாக ஏற்கப்படமாட்டார்கள் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன் காரணமாக மைத்திரிக்கு நிரந்தர பொதுச்செயலாளர் இல்லாத காரணத்தினால் நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்படி, இருவரிடமும் கலந்துரையாடி ஒருவரை முன்னிறுத்துமாறும் அல்லது நீதிமன்ற நடவடிக்கையை வாபஸ் பெறுமாறும், இல்லை என்றால் மைத்திரிக்கு பொதுச் செயலாளரை நியமிக்க மத்திய குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் முன்னாள் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

# 30 ஆம் திகதி வீதியில் இறங்குகிறது சஜித் கட்சி

வட் வரி அதிகரிப்பை எதிர்த்து எதிர்வரும் 30 ஆம் திகதி மக்கள் வீதியில் இறங்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட சபை உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்திதான் முதலில் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகில் சென்று போராட்டத்தை ஆரம்பித்தது எனவும் மரிக்கார் தெரிவித்தார்.

மறந்து போன வரலாற்றை அரசுக்கு நினைவூட்டி ஆட்சியை விரட்டியடித்துவிட்டுத்தான் திரும்பிப் பார்ப்பேன் என்றும் தெரிவித்திருந்தார்.



“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# அழிவடையும் யானை காப்பாற்றப்பட வேண்டும்

வருடா வருடம் உலகளவில் யானைகள் அதிக எண்ணிக்கையில் இறப்பதில் இலங்கை முதலிடத்தில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் புள்ளிவிபரங்கள் அதிகரித்து வருகின்றன, மீதமுள்ள யானைகளின் எண்ணிக்கையை நாம் காப்பாற்ற வேண்டுமானால் விரைவான நடவடிக்கைகள் தேவை. சுற்றுலாத்துறையில், யானைகள் மிகவும் தேவைப்படும் அந்நியச் செலாவணியைக் கொண்டுவரும் ஒரு நட்சத்திர ஈர்ப்பாகும், ஆனால் கிராமப்புற விவசாயிகள் மற்றும் விவசாய மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு அவை ஆபத்தான தொல்லையாக இருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன் யானைகள் சுதந்திரமாக சுற்றித்திரிந்து மனிதர்களுடன் சகவாழ்வு வாழ்ந்த நிலையில், இன்று இரு தரப்பிலும் உயிர் சண்டையாக உள்ளது. நீர் ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாகும், யானைகள் ஆதாரங்களை அணுக மைல்கள் மலையேற்றம் மற்றும் உணவுக்காக அதிக அளவு தீவனம் தேவைப்படுகின்றன, இதன் விளைவாக அவை மனித குடியிருப்புகள் வழியாகப் பயணிக்கின்றன. இயற்கையாகவே, அவர்கள் வீட்டுத்தோட்டங்களில் சேமிக்கப்படும் உணவு, அரிசி ஆகியவற்றால் ஈர்க்கப்படுகின்றன.

சில யானைகள் தங்களுக்குப் பழக்கமான வாழ்விடத்திலிருந்து வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு, பட்டினியால் மெதுவான மரணத்திற்கு மட்டுமே அவற்றைத் தாங்க முடியாத வாழ்விடங்களில் அடைத்து வைக்கப்படுகின்றன, மற்றவர்கள் சுடப்பட்டு, பல நாட்கள் மற்றும் மாதக்கணக்கில் புல்லட் காயங்களுடன் அவர்களும் இறப்பதற்கு முன் அவதிப்படுகிறார்கள். ஹக்கா பட்டாஸ் (உணவில் தூண்டில் மறைத்து வைக்கப்பட்ட வெடிகள்) உணவு உண்டபின் தாடைகள் துண்டாகி, பட்டினியால் இறப்பதற்கு வாரக்கணக்கில் அவதிப்படுபவர்களும் உண்டு. ஒரு பௌத்த நாட்டில் ஒரு காட்டுமிராண்டித்தனமான மற்றும் நம்பமுடியாத மனிதாபிமானமற்ற மரணம்.

இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் சிவப்பு பட்டியல் ஆசிய யானைகளை அழிந்து வரும் உயிரினமாக வகைப்படுத்துகிறது. யானை இறப்புகளில் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் புள்ளிவிபரங்களுடன், நமது துணை இனமான எலிபாஸ் மாகசிமஸ் உண்மையான அழிவுக்கான சாத்தியக்கூறுகள் நாட்டை எதிர்நோக்கும் ஒரு திட்டவட்டமான சாத்தியமாகும்.

2023 ஆம் ஆண்டு 449 யானைகள் இறந்தன. இயற்கையான மரணம், தந்தத்துக்காகக் கொலை செய்தல், ரயிலுடன் மோதி மரணம் என யானைகளின் அவலச் சாவு நீள்கிறது. பயிர்களை யானைகள் அழிப்பதால் மின் வேலி அமைக்கப்படுவதும், அதில் யானைகள் சிக்கி இறப்பதும் தொடர்கதையாக உள்ளன. மின் வேலியமைத்து யானைகளைக் கொன்றவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்பட்டதெனத் தெரியாது.

இலங்கையின் துணை இனமானது உலகில் வாழும் யானைகள் அல்லது யானைகளின் மூன்று இனங்களில் ஒன்றாகும், மற்றவை ஆபிரிக்க புஷ் யானை மற்றும் ஆபிரிக்க வன யானை. இது ஆபிரிக்க புஷ் யானைக்குப் பிறகு இரண்டாவது பெரிய யானை இனமாகும். சிறிய யானை மற்றும் மேற்கு ஆசிய யானை போன்ற அழிந்து வரும் உயிரினங்களின் வரிசையில் மீதமுள்ள 4,000 யானைகள் சேரக்கூடிய ஒரு முக்கிய புள்ளியை ஓரிரு வருடங்களில் எட்ட முடியும் என்பதை புரிந்து கொள்ள ஒருவர் நிபுணராக இருக்க வேண்டியதில்லை. நமது யானைகள் அழிந்து போவது ஒரு உண்மையான சாத்தியம் என்பதை அங்கீகரிக்க வேண்டும். ஒரு சீரற்ற வைரஸ் அல்லது கடுமையான வறட்சி, மீதமுள்ள மக்களை திரும்பப் பெற முடியாத இடத்திற்கு எளிதில் அனுப்பும். நிபுணர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுகள் பல மற்றும் வேறுபட்டவை, ஆனால் பொதுவான ஒருமித்த கருத்து என்னவென்றால், இந்த நெருக்கடி விரைவான மற்றும் அவசர நடவடிக்கையைக் கோருகிறது.

# உலகின் சக்தி வாய்ந்த பாஸ்போட்கள்

சமீபத்திய ஹென்லி பாஸ்போர்ட் குறியீட்டின் படி, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின் ஆகிய நாடுகள் உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட்களை கொண்டுள்ளன.

உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் என்றால் அந்த பாஸ்போர்ட்டை வைத்திருப்பவர்கள் விசா இல்லாமலேயே அதிக நாடுகளுக்குள் நுழையலாம்.

சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் தரவுகளின்படி, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின் ஆகிய நாட்டின் பாஸ்போர்ட்டை வைத்திருப்பவர்கள் 194 நாடுகளுக்கு விசாவே இல்லாமல் செல்லலாம்.

கடந்த ஐந்தாண்டுகளாக ஜப்பானும் சிங்கப்பூரும் தொடர்ந்து நம்பர் 1 இடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

ஆனால், தற்போது சில ஐரோப்பிய நாடுகளும் அந்த பந்தயத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளன.

பின்லாந்து, சுவீடன், தென்கொரியா ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தில் உள்ளன.

இந்த நாடுகளின் பாஸ்போர்ட்டை வைத்திருப்பவர்கள் 193 நாடுகளுக்கு விசாவே இல்லாமல் பயணிக்கலாம்.

அவுஸ்திரேலியா, டென்மார்க், அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பாஸ்போர்ட்கள் 192 நாடுகளுக்கு விசா இல்லாமல் அணுகலை வழங்குவதன் மூலம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன.

# பயங்கரவாதி பன்னூன் கொலை சதித்திட்ட வழக்கு



பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னூனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டிய வழக்கில் நிகில் குப்தாவின் வழக்கறிஞரிடம் ஆதாரங்களை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதி குர்பத்வந்த் சிங் பன்னூனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டிய வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிகில் குப்தா ஒரு இந்திய அரசாங்க அதிகாரி ஆவார்.

நிகில் குப்தாவுக்கு எதிரான ஆதாரங்களை அவரது வழக்கறிஞர்களிடம் கொடுப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதற்காக ஒரு கடிதத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் அமெரிக்க அரசு, “செக் குடியரசில் அவரை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் நிலுவையில் உள்ள நிலையில், நிகில் குப்தாவுக்கு எதிரான ஆதாரங்களைக் கோரி அவர் சமர்ப்பித்திருக்கும் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்க அரசாங்கம் இந்தக் கடிதத்தை மரியாதையுடன் சமர்ப்பிக்கிறது” என்று கூறியுள்ளது.

# இந்தியாவின் மிகநீளமான கடல் பாலம்



இந்தியாவின் மிகநீளமான கடல் பாலமான மும்பை டிரான்ஸ் ஹார்பர் இணைப்பை (MTHL) பிரதமர் நரேந்திர மோடி நாளை திறந்து வைக்க உள்ளார்.

தெற்கிலிருந்து நவி மும்பை வரை நீளும் (செவ்ரி மற்றும் நவா ஷேவா இடையே) 21.8 கி.மீ நீளமுள்ள இக்கடல் பாலம், தற்போதைய இரண்டு மணிநேர பயணத்தை 15-20 நிமிடங்களாகக் குறைக்கும். இந்தப் பாலத்தின் திறப்பு விழாவை அறிவித்த மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, இது பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

இந்தப் பாலம் அதிகாரபூர்வமாக அடல் பிஹாரி வாஜ்பாய் செவ்ரி-நவ ஷேவா அடல் சேது பாலம் என்று அழைக்கப்படுகிறது.

ரூ.21,200 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இப்பாலத்திற்கான தொகையில் ரூ.15,000 கோடி கடன் மூலம் பெறப்பட்டதாகும்.

இந்தப் பாலம் மகாராஷ்டிராவின் இரண்டு பெரிய நகரங்களான மும்பை-புனே விரைவுச்சாலையுடன் இணைக்கப்பட உள்ளது.

ஆறு வழி கடல் பாலமாக கட்டப்பட்டிருக்கும் இப்பாலம், கடலில் 16.50 கிலோ மீற்றர்களுக்கும் நிலத்தில் 5.50 கிலோ மீற்றர்களுக்கும் நீள்கிறது.

இந்நிலையில், நாளை திறக்கப்பட இருக்கும் இந்தக் கடல் பாலத்தில் மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோரிக்‌ஷாக்கள் மற்றும் டிராக்டர்கள் அனுமதிக்கப்படாது என்று மும்பை காவல்துறை தெரிவித்துள்ளது.

# அரச ஊழியர்களின் பணிநேர சுற்றறிக்கை வெளியீடு

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை அலுவலகங்களில் இருந்து கடமைகளைச் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சில அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உரிய காலத்தை பொருட்படுத்தாமல் வந்து செல்வதை அவதானித்ததையடுத்து பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கை மூலம் இதனைத் தெரிவித்துள்ளது. அரசு அலுவலகங்கள் பிற்பகல் 3:00 மணி வரை பண பரிவர்த்தனைக்காக திறந்திருக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், பணியின் போது தனது அலுவலக அடையாள அட்டையை அணிந்து கொள்வதுடன் மேலும் சீருடை உதவித்தொகை பெறும் அனைத்து அரசு அலுவலர்களும் தங்களது சீருடைகளை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொது தினமாக ஒதுக்கப்பட்டுள்ள திங்கட்கிழமைகளில் அமைச்சின் கீழ்மட்ட அதிகாரி முதல் அமைச்சின் செயலாளர் வரை அனைத்து மட்டத்திலான அதிகாரிகளும் அலுவலகத்தில் தங்கியிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாடசாலை மாணவர்களின் சீசன் டிக்கட் இரத்து?

ஜனவரி மாதம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீசன் சீட்டுக்களின் செல்லுபடித் தன்மையை உடனடியாக இரத்துச் செய்ய இலங்கை போக்குவரத்து சபையின் பொது முகாமையாளர் தீர்மானித்துள்ளார் என்றும் ஜனவரி 8 ஆம் திகதி போக்குவரத்து சபைக்கு 66 ஆண்டுகள் பூர்த்தியாகும் இச்சந்தர்ப்பத்தில், இவ்வாறான செயல் மூலம் பிள்ளைகள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (10) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விடுமுறை ஒரு மாதமாக இருந்தாலும் பிள்ளைகளுக்கு மேலதிக வகுப்புகள் நடப்பதாவும், இந்த புதிய விதிமுறையின் மூலம் வார இறுதி நாட்களில் சீசன் டிக்கெட்டுகளை பயன்படுத்துவதற்குக்கூட தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைகூட நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்வது தவறு என்பதால், இரத்துச் செய்யப்பட்ட சீசன் டிக்கெட்டுகளை செல்லுபடியாக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கோரிக்கை விடுத்தார்.

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எண்ணெய்க் குழாய்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எண்ணெய்க்குழாய் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் இது வரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான காஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க முன்னர் அது குறித்த அபிவிருத்தி தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு, அதன் சந்தைக்கேள்வி உள்ளிட்டவை தொடர்பில் ஆராய வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்

# மது, சிகரெட்டு விலை மீண்டும் உயர்வு?

இந்த ஆண்டு மீண்டும் மதுபானம், சிகரெட் விலை அதிகரிக்கலாம் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சம்பத் டி சேரம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையில் மதுபானம் மற்றும் சிகரெட்டுகளுக்கான விலை சூத்திரத்தையோ அல்லது மதுபானத்திற்கு மது வரி விதிக்கும் முறையையோ முன்மொழிந்துள்ளதால், விலைகள் அதிகரிக்கலாம் என அவர் கூறுகிறார்.

மதுபானம் மற்றும் சிகரெட்டுகளின் விலை அதிகரிப்பினால் அரசாங்கத்திற்கான வரி வருமானம் அதிகரித்து நுகர்வு குறைவதால் மதுபானம் மற்றும் சிகரெட் பாவனையாளர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக செலவிடப்படும் தொகை குறைவாகவே காணப்படுவதாக சம்பத் டி சேரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கடந்த வருடம் மதுவரி 10% அதிகரிக்கப்பட்டபோது மது பாவனை 11.7% குறைந்துள்ளதாக ஆய்வுகள் மற்றும் எதிர் நடவடிக்கைகளுக்கான நிலையம் அறிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐஸ் போதைப்பொருளுடன் கான்ஸ்டலின் கைது

திருகோணமலையைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 50 கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்றிரவு (10) மேற்கொண்ட சோதனையின் போது திருகோணமலையைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 50 கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் கான்ஸ்டபிள், மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த வேளையில், யுக்திய திட்டத்திற்கு அமைவாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து வில்கம் விகாரைப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி பிரித்தானிய இளவரசி சந்திப்பு



இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் பிரித்தானிய ஆன் இளவரசி, அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் நேற்று (10) கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்நிகழ்வை நினைவு கூறும் விதமாக ஜனாதிபதி மாளிகையிலிருக்கும் விருந்தினர் பதிவேட்டில் இளவரசி ஆன் நினைவுக் குறிப்பொன்றைப் பதிந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

# புடவைகளின் விலை அதிகரிப்பு

இலங்கையில் மறுசீரமைக்கப்பட்ட வட் வரியினால் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

ஆடையகங்களில் அதிகம் விற்பனையாகும் புடவைகளின் விலை அதிகரித்து, புதிய வட் திருத்தத்தின் மூலம் 2,500 ரூபாய்க்கு புடவைகளுக்கு 450 ரூபாயும், 6,990 ரூபாய் புடவைகளுக்கு 1,260 ரூபாயும், 12,499 ரூபாய் புடவைகளுக்கு 2,250 ரூபாயும் என வரி அறவிடப்படுகின்றது.



போலியாக வட் வரி அறவீடு செய்யும் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை வட் வரி அதிகரிப்புடன் 2499 ரூபா புடவை ஒன்றிற்கு 75 ரூபா வினால் மட்டுமே வட் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலக அரச வருவாய் பிரிவின் பணிப்பாளர் கே.கே.ஐ. ஏரந்த தெரிவித்துள்ளார்.

# அவுஸ்திரேலிய ஓபன் 2024



ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய ஓபனில் முதல் சுற்றில் 2020 சம்பியனான சோபியா கெனினையும் 2016 வெற்றியாளரான ஏஞ்சலிக் கெர்பர் அல்லது டேனியல் காலின்ஸை இரண்டாவது அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்திற்கான கடினமான தொடக்கத்தில் முதலிட தரவரிசையில் உள்ள இகாஸ் வியாடெக் எதிர்கொள்வார்.

நடப்பு சம்பியனான நோவக் ஜோகோவிச்சின் 11 ஆவது அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்திற்கான முயற்சியில் ஆண்டி முர்ரேவுக்கு எதிரான மூன்றாவது சுற்று ஆட்டமும் கடந்த ஆண்டு இரண்டாம் இடத்தைப் பிடித்த 7 ஆம் நிலை வீரரான ஸ்டெபனோஸ் சிட்சிபாஸுக்கு எதிரான காலிறுதிப் போட்டியும் அடங்கும்.

குழந்தை பிறந்ததன் பின்னர் முன்னாள் சம்பியன்களான நவோமி ஒசாகா, கெர்பர், கரோலின் வோஸ்னியாக்கி மெல்போர்ன் பூங்காவிற்குத் திரும்பியதன் மூலம் ஒற்றையர் அடைப்புக்குறிகளைத் தீர்மானிப்பதற்கான டிராக்கள் வியாழக்கிழமை நடைபெற்றன.

இரண்டுமுறை அவுஸ்திரேலிய ஓபன் மற்றும் யு.எஸ் ஓபன் பட்டங்களை வென்ற ஒசாகா, 16 ஆம் நிலை வீராங்கனையான கரோலின் கார்சியாவுக்கு எதிராக துவக்கி, யு.எஸ் ஓபன் வெற்றியாளரான கோகோ காஃப் உடன் டிராவின் அதே காலாண்டில் உள்ளார்.

2022 ஆம் ஆண்டு அரையிறுதியில் ஸ்விடெக்கை தோற்கடித்த காலின்ஸுக்கு எதிராக மூன்று முறை பெரிய வெற்றியாளர் கெர்பர் தொடங்குவார். அவுஸ்திரேலிய ஓபனில் இது வரை ஸ்விடெக்கின் சிறந்த இதுவாகும்

2018 சம்பியனான வோஸ்னியாக்கி, முதல் சுற்றில் 2023 அரையிறுதி மற்றும் 20 ஆம் நிலை வீராங்கனையான மக்டாலினெட்டை சந்திக்கிறார், அதே நேரத்தில் நடப்பு சாம்பியனான அரினா சபலென்கா ஒரு தகுதிச் சுற்றுக்கு எதிராகத் தொடங்குகிறார்.

# லாமிச்சானேவுக்கு 8 வருட சிறைத்தண்டனை

17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து, சந்தீப் லாமிச்சானேவுக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கை விசாரித்த நேபாள நீதிமன்றம் சந்தீப் லாமிச்சானேவுக்கு 8 ஆண்டுகள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. ஷிஷார் ராஜ் தாகலின் பெஞ்ச் சந்தீப் லாமிச்சானே குற்றவாளி என்று தீர்ப்பளித்து, அவருக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

நேபாள கிரிக்கெட் அணியின் கப்டனாக சந்தீப் லாமிச்சானே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு டிசம்பரில், சந்தீப் லாமிச்சானே தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக 17 வயது சிறுமி ஒருவர் குற்றம் சாட்டினார்.

17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததாக நேபாள கிரிக்கெட் வீரர் லாமிச்சானே மீது காத்மாண்டு மாவட்ட வழக்கறிஞர் அலுவலகம் ஆகஸ்ட் 21 ஆம் திகதி வழக்குப் பதிவு செய்தது. அப்போது, சந்தீப் லாமிச்சானே கரீபியன் பிறிமியர் லீக்கில் விளையாடுவதற்காக டிரினிடாட் மற்றும் டொபாகோ சென்றிந்தார். பின்னர், சந்தீப் லாமிச்சானே கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆம் திகதி திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பின்னர், சந்தீப் லாமிச்சானே வங்கிக் கணக்கு சீல் வைக்கப்பட்டு, அவரது சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

தொடர்ந்து, கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி 17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் காத்மாண்டு மாவட்ட நீதிமன்றம் குற்றத்தின் அடிப்படையில் லாமிச்சானேவை சுந்தராவில் உள்ள மத்திய சிறைக்கு அனுப்பியது.

இதனைத் தொடர்ந்து, கடந்த ஜனவரி 2023 ஆம் திகதி சந்தீப் லாமிச்சானே நிபந்தனை அடிப்படையில் ஜாமீனில் வெளிவந்தார். அப்போது, நீதிபதி துருவ்ராஜ் நந்தா மற்றும் நீதிபதி ரமேஷ் தஹல் ஆகியோர் அடங்கிய பதான் உயர் நீதிமன்றத்தின் கூட்டு பெஞ்ச் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி சில நிபந்தனைகளுடன் 20 லட்சம் நேபாள ரூயாய் பத்திரத்தில் சந்தீப்பை விடுவிக்க உத்தரவிட்டநிலையில், அவர் சிறையில் இருந்து வெளியே வந்தார்.

நேபாளத்தின் மிகவும் பிரபலமான கிரிக்கெட் வீரர்களில் சந்தீப் லாமிச்சானேவும் ஒருவர். சந்தீப் லாமிச்சானே நேபாளத்திற்காக 51 ஒருநாள் மற்றும் 51 ரி20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் அவர் ஒருநாள் போட்டியில் 112 விக்கெட்டுகளையும் ரி20 இல் 98 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

இது தவிர ஐ.பி.எல்லில் விளையாடிய முதல் நேபாள கிரிக்கெட் வீரர் சந்தீப் லாமிச்சானே ஆவார். சந்தீப் லாமிச்சானே ஐ.பி.எல் 2018 சீசனில் டெல்லி கேப்பிடல்ஸ் அணிக்காக விளையாடியுள்ளார்.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் விளையாடிய ஐ.பி.எல் சீசனில் டெல்லி கேபிடல்ஸ் அணியில் இடம் பிடித்திருந்தார். அதில் அவர் 9 போட்டிகளில் விளையாடும் வாய்ப்பைப் பெற்று 13 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 11.01.2024 அன்று வெளியிடப்பட்டது.